1972 சனவரி 25]

திரு. ச. சங்குமுத்து தேவர் : எந்தப் பகுதியில் நிறுவப் பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இன்னும் தொடங்கவே இல்லை என்று சொன்னேன்.

திரு. ச. சங்குமுத்து தேவர் : இவ்வளவு நாள் காலதாமதம் ஆனதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதற்கு முக்கிய காரணம் என்று அவர்கள் சொல்லி இருப்பது 'இடா ரிட்ஸ் a pilot project for கிடைப்பது காலதாமதம் ஆகிறது என்பது தான். வேறு காரணம் பற்றி அரசாங்கத்தில் தகவல் இல்லை.

Tamil names for Government buildings

* 54 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether Tamil names are being given to Government buildings situated inside Government Estate, Mount Road, Madras; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) ஒரு விவர அறிக்கை@ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

துறைமுகங்கள்

* 55 *வினா.*—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் எந்த எந்த துறைமுகங்களை விரிவு படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது?

(இ) அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) கடலூர்.

(இ) கடற்பாலம் ஒன்று கட்டுவதற்கும், இரண்டு மணல் வாரி பம்புகள் போடுவதற்கும் ரூ. 1,39.24 லட்சம் செலவில் திட்டமிடப் பட்டு, 1964-ம் வருஷம் தொடங்கப்பட்ட வேலைகள் இப்போது முடிவடையும் தருவாயில் உள்ளன.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, கடலூர் துறைமுகத்தை இப்போது வர்த்தக துறைமுகமாக விரிவுபடுத்த ஏதேனும் மத்திய அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறதா? சேது சமுத்திரம் திட்டத்தின் நிலை எந்த அளவில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

@ 102-103-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தனிக் கேள்வி போடுங்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, குளச்சல் துறைமுகம் சம்பந்தமாக முன்பு அரசாங்கம் ஏதோ நடவடிக்கை எடுத்தார்களே அது என்ன நிலையில் இருக்கிறது? மத்திய அரசாங்கம் அதற்கு ஒப்புதல் அளித்து இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, குளச்சல் துறைமுகத்தில் ரூ. 53,000 செலவில் ஒரு ரோடு சீரமைப்பு வேலை நடந்து கொண்டு வருகிறது. இன்னும் 2 மாதத்தில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, குளச்சல் துறைமுகத்தை அபிவிருத்தி செய்கின்ற வகையில் ஒரு ரோடு போடுவதாக அமைச்சர் சொன்னார்கள். ரோடு போடுவது துறைமுக அபிவிருத்திக்கு அவசியப்பட்ட வேலையாக இருந்தாலும் அது துறைமுக அபிவிருத்தி வேலையாக கருத முடியாது. ஆகவே, அந்தத் துறைமுகத்தின் அவசியத்தை ஒட்டி அங்கே உள்ள இலுமினைட், மானோசைட் உலோகப் பொருள்கள் வெளிநாட்டுக்குப் போக வேண்டிய முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, அதை அபிவிருத்தி செய்வதற்கு இந்த அரசாங்கம் ஏதாவது திட்டங்கள் வகுத்து செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, இப்போது சீரமைப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட துறைமுகங்களில் ஒன்று கடலூர் என்று சொன்னேன். குளச்சல் துறைமுகத்திலே இப்போது செய்யப்படுகின்ற வேலை துறைமுகத்தை வளர்ச்சி செய்யாது என்று சொன்னார்கள். அது சரியல்ல. துறைமுக வேலைகள் இரண்டு வகைப்படும். ஒன்று ஷோர் ஒர்க்ஸ். இன்னொன்று சீ ஒர்க்ஸ். ஷோர் ஒர்க்ஸ் என்பது துறைமுகத்தை ஒட்டிய வேலை. ரோடு போடுவதும் துறைமுகத்தை ஒட்டிய வேலை தான்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, கடற்பாலம் அமைப்பது என்பது ஒரு சிறிய திட்டம் தான். முன்பு இருந்ததே ஒரு திட்டம், அது என்ன ஆயிற்று? அந்தத் திட்டத்தைப் பற்றி இப்போது புனராய்வு செய்ய அரசு முன்வருமா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இந்த வேலை முடிந்த பிறகு அந்தத் திட்டத்தைப்பற்றி மேற்கொண்டு ஆராயவேண்டும். தமிழகத்தில் சீரமைப்பதற்கு எடுத்துக்கொண்ட துறைமுக வேலைகள் முடிந்த பிறகு, அதுபற்றி ஆய்வு செய்யப்படும். குளச்சலில் போர்ட் ஒன்று தேவை என்பதை அரசு உணர்கிறது.

1972 சனவரி 25]

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் உள்ள நாகப்பட்டினம் துறைமுகத்தை விரிவுபடுத்துவதற்கு அரசாங்கத்திடம் ஏதேனும் உத்தேசம் உண்டா? அந்தத் திட்டத்தை எப்போது எடுத்துக்கொள்ள முடியும்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நாகப்பட்டினத்தை விரிவுபடுத்துவதற்கு அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, குளச்சல் துறைமுகத்தை மத்திய அரசாங்கத்தின் ஒரு அமைச்சர் வந்து சமீபத்தில் பார்வையிட்டு விட்டு, அந்தத் திட்டத்தை அதிவிரைவில் நிறைவேற்றித் தருவதாகக் கூறிச்சென்று இருக்கிறார் என்று அங்குள்ள மக்கள் சொல்கிறார்கள். மத்திய அரசாங்கம் அதற்கு இத்தகைய ஆதரவு அளிக்கும்போது, இந்த அரசாங்கம் அந்த அளவுக்கு ஆதரவு காட்டவில்லையே என்று அங்கே உள்ள மக்கள் குறைப்பட்டுக்கொள்கிறார்களே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, துறைமுகங்கள் இரண்டு வகைப்படும். ஒன்று, மைனர் போர்ட், இன்னொன்று, மேஜர் போர்ட். மத்திய அரசின் ஆளுகைக்கு உட்பட்டது மேஜர் போர்ட். மைனர் போர்ட்டுகள் எல்லாம் மாநில அரசின் ஆளுகைக்கு உட்பட்டவை.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவரவர்களே கடலூரில் துவக்கப்பட இருக்கும் துறைமுக வேலைக்கு, தமிழ்நாட்டின் பங்கு என்ன, மத்திய அரசாங்கத்தின் பங்கு என்ன? மத்திய அரசாங்கத்தின் பங்கு இல்லை என்று சொன்னால், அதற்கு நம் அரசு வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மொத்தம் எவ்வளவு செலவாகிறது என்ற புள்ளி விவரம் என்னிடத்தில் இருக்கிறது, என்று ஏற்கெனவே சொன்னேன். மத்திய அரசின் பங்கு எவ்வளவு, தமிழக அரசின் பங்கு எவ்வளவு என்ற புள்ளிவிவரம் தற்போது என் கைவசம் இல்லை.

* 56 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether there are proposals to convert Tengaipattinam in Kanyakumari district into a minor port?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இல்லை.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, தேங்காய்ப்பட்டணம் சரித்திரப் புகழ் பெற்ற துறைமுகமாக இருப்பதால், அதைத் துறைமுகக் கமிட்டியினர் பார்வையிட்டார்களா? அவர்கள் ஏதாவது ஆராய்ச்சி செய்தார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, தேங்காய்ப்பட்டணம் நிச்சயமாக சரித்திரப் புகழ் பெற்றது என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. அது குளச்சலிலிருந்து எட்டு மைல் தொலைவில் தான் இருக்கிறது. ஆகவே, குளச்சல் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும்